**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2023–ஆம் வருடம் ஜுன் மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.198/2022**

**(பழனி முதன்மை சார்பு நீதிமன்ற அசல்வழக்கு எண்.127/2013)**

**(CNR No. TNDG19–000508–2022)**

**----**

1. கைருன்னிசா

2. கலீல் ரகுமான் ...... வாதிகள்

*/ எதிர் /*

1. பஜ்லூர் ரகுமான்

2. செந்தில்குமார்

* 3. பாத்திமாபீவி **(இறப்பு)** ...... பிரதிவாதிகள்

(* Amended as per order in memo dated 13.12.2022)

இந்த வழக்கானது அசல்வழக்கு எண்.127/2013 ஆக கடந்த 11.06.2013 ஆம் தேதி பழனி சார்பு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று பின்பு ஆள் எல்கை வரையறையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ1. தேதி: 15.12.2021 உத்தரவின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தால் **அசல் வழக்கு எண்.198/2022 ஆக 02.01.2022**–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.ஜி.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

## தீர்ப்புரை

**1.** தாவா சொத்தில் 1 ஆம் வாதிக்குரிய 1/2 பங்கு பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்து 1 ஆம் வாதிக்கு தனித்த சுவாதீனம் கிடைக்கும்வகையில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அவ்வாறு பிரதிவாதிகள் 1 ஆம் வாதிக்குரிய 1/2 பங்கை பிரித்துக்கொடுக்க மறுக்கும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அளந்து அத்துக்கண்டு 1 ஆம் வாதிக்குரிய பங்கை பிரித்து தரும்படி இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்க கோரியும், மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம். :–**

தாவா சொத்து ஆதியில் 1 ஆம் வாதி மற்றும் 3 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 1 ஆம் வாதி இரண்டாம் வாதியின் கணவர், 2 ஆம் வாதி, 3 ஆம் பிரதிவாதி ஆகியோர் 06.12.1991 ஆம் தேதி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளனர் என்றும், 2 ஆம் வாதியும், அவரது தாயாரும் கிரையத்தேதி முதல் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்தார்கள் என்றும், 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் வாதியின் சகோதரியை திருமணம் செய்த மைத்துனர் என்றும், 2 ஆம் வாதியும், அவரது தாயார் இருவரும் சென்னையில் வசித்து வந்து 1 ஆம் பிரதிவாதியை தாவா சொத்தை பாதுகாக்க சொன்னதாகவும், 1 ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதின்பேரில் 2 ஆம் வாதியும் மற்றும் அவரது தாயாரும் தாவா சொத்தை பராமரிக்கவும், பாதுகாக்கவும் 07.08.2006 ஆம் தேதி அதிகார முகவர் பத்திரம் எழுதி பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், கடந்த 07.06.2010 ஆம் தேதி 2 ஆம் வாதி தாவா சொத்தில் அவரது பாதி பங்கை பொறுத்து 1 ஆம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும், 2 ஆம் வாதி, 1 ஆம் வாதிக்கு தாவா சொத்தில் அவருக்குள்ள பாதி பங்கை

பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்பு 1 ஆம் பிரதிவாதி அவருக்குள்ள அதிகார முகவர் பத்திரத்தை தவறாக பயன்படுத்தி 2 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், 2 ஆம் வாதி, தாவா சொத்தில் உள்ள அவரது பாதி பாகத்தை பொறுத்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்ட பின்பு 07.08.2006 ஆம் தேதிய அதிகார முகவர் பத்திரம் தானாக ரத்தாகிவிடும் என்றும், 1 ஆம் வாதி 26.10.2010 ஆம் தேதி 2 ஆம் பிரதிவாதிக்கு 22.09.2010 ஆம் தேதிய கிரைய ஆவணத்தை ரத்து செய்து செய்ய கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், 2 ஆம் பிரதிவாதி போஸ்ட்மேன் உதவியுடன் அறிவிப்பு விபரத்தினை தெரிந்துகொண்டு அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியுள்ளார் என்றும், வாதிகள் மீண்டும் அவரது வழக்கறிஞர் மூலம் 30.11.2010 ஆம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளதாகவும், வாதி, 21.09.2011 ஆம் தேதி மீண்டும் 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பை 1 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், 2 ஆம் வாதியின் தாயாரான 3 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியுடன் சேர்ந்துகொண்டதாகவும், தாவா சொத்தில் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரத்தின் மூலம் எந்தவித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் வழங்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளனர்.

**3)** பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையின்போது

பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டு ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

**4)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதிகள் தாவாவில் கோரியவாறு பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**5)** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2 ஆம் வாதி கலீல்ரகுமான் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஆக ஒரு சதக்கத்துல்லா விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>6. பிரச்சனைக்கான தீர்வு :–</u>**

வாதிகள்தரப்பு வாதம் கேட்கப்பட்டது, வழக்காவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. தாவா சொத்து ஆதியில் 1 ஆம் வாதி மற்றும் 3 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 1 ஆம் வாதி, 2 ஆம் வாதியின் மனைவி, 3 ஆம் பிரதிவாதி 2 ஆம் வாதியின் தாயார் எனவும், 2 ஆம் வாதியும், 3 ஆம் பிரதிவாதியும் தாவா சொத்தை 06.12.1991 ஆம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள் என்றும், 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் வாதியின் மைத்துனர் என்றும், 2 ஆம் வாதியும், அவரது தாயார் 3 ஆம் பிரதிவாதியும் சென்னையில் குடியிருந்து வந்து 1 ஆம் பிரதிவாதியை தாவா சொத்தை பாதுகாத்து பராமரித்து வருமமாறு தெரிவித்திருந்தார்கள் என்றும், 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் வாதி மற்றும் 3 ஆம் பிரதிவாதி ஆகியோருடன் கேட்டு அவர்களின் அதிகார முகவராக 07.08.2006 ஆம் தேதி அதிகார முகவர் பத்திரம் எழுதி பெற்றுக்கொண்டார் என்றும், 2 ஆம் வாதி தாவா சொத்தில் அவருக்கு இருந்த பாதி பங்கை பொறுத்து 17.06.2010 ஆம் தேதி 1 ஆம்

வாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், 1ஆம் வாதி, 2ஆம் வாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் தேதிக்கு பின்பு 1ஆம் பிரதிவாதி, தாவா சொத்தினை 2ஆம் பிரதிவாதிக்கு அதிகார முகவர் பத்திரத்தை தவறாக பயன்படுத்தி கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், 2 ஆம் வாதி, 1 ஆம் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள அவரது பாதி பங்கை தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடத்த பின்பு 1ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட அதிகார முகவர் பத்திரம் வாதிகளின் பாதி பாகத்தை பொறுத்து ரத்தாகிவிட்டது என்றும், 2ஆம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து உண்மையான கிரையதாரர் அல்ல என்றும், வாதிகள் அவரது வழக்கறிஞர் மூலம் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1ஆம் பிரதிவாதி பொய்யான காரணங்களை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், வாதிகள் தாவா சொத்தில் உள்ள பாதி பாகத்தை பிரித்து தரக் கோரியும், பிரதிவாதிகள் பிரித்துத்தர மறுத்து வருவதாக தெரிவித்து வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தரப்பில் 2ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர் என்றும், இவ்வழக்கில் வா.சா.1– இன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களை பரிசீலிக்கையில் வா.சா.ஆ.1 ஆனது 06.12.1991ஆம் தேதி தாவா சொத்தினை 2ஆம் வாதி, 3ஆம் பிரதிவாதி ஆகியோர் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆனது 07.08.2006ஆம் தேதி 1ஆம் பிரதிவாதியை 2ஆம் வாதி, 3ஆம் பிரதிவாதியின் அதிகார முகவராக நியமித்து எழுதிக்கொடுக்கப்பட்ட அதிகார முகவர் பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆனது 17.06.2010ஆம் தேதி 2ஆம் வாதி தாவா சொத்தில் அவருக்குள்ள பாதி

பாகத்தை 1 ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆனது 23.08.2010 ஆம் தேதி 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ஆனது 26.10.2010 ஆம் தேதி 1 ஆம் வாதி, 2 ஆம் பிரதிவாதி மற்றும் பலருக்கு அனுப்பிய அறிவிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆனது 2 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆனது 30.11.2010 ஆம் தேதி வாதிகள், 1, 2 பிரதிவாதிகளுக்கு அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 ஆனது 1 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.11 ஆனது 2 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 ஆனது 11.10.2011 ஆம் தேதி 1 ஆம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13 ஆனது 04.03.2013 ஆம் தேதிய தாவா சொத்திற்கான கணினிப்பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.14 ஆனது தாவா சொத்தின் கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தாவா சொத்து 2 ஆம் வாதியும் மற்றும் 3 ஆம் பிரதிவாதியும் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள் என்பதும், 2 ஆம் வாதியும், 3 ஆம் பிரதிவாதியும் தாவா சொத்தை பொறுத்து 1 ஆம் பிரதிவாதியை அதிகார முகவராக நியமித்து அதிகார முகவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதும், 2 ஆம் வாதி, தாவா சொத்தில் அவருக்குள்ள பாதி பாகத்தை 1 ஆம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்

என்பதும், 1ஆம் வாதிக்கு தாவா சொத்தில் பாதி பாக உரிமை உள்ளது என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

**7.** வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், வா.சா.1–இன் சாட்சியத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளும்வகையில் இருப்பதாலும், இதை மறுக்கும்விதத்தில் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் தாவாவை மறுக்கும்வண்ணம் சாட்சியங்கள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தாததாலும், வாதிகள் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என தீர்மானித்து இவ்வாறு இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**8.** முடிவாக, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா சொத்தில் 1ஆம் வாதிக்குரிய 1/2 பங்கு பாகத்தை நயமிடர் கண்டு அளந்து அத்திட்டு பிரதிவாதிகள் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் பிரித்து தனித்த சுவாதீனம் வழங்க வேண்டுமென முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அவ்வாறு பிரதிவாதிகள் 1ஆம் வாதியின் பாகத்தை பிரித்துக்கொடுக்க தவறும்பட்சத்தில் 1ஆம் வாதி இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்துகொள்ள அனுமதியளித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் ஜூன் மாதம் 22 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.06.22 17:45:05 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**9. வாதிகள்தரப்பு சாட்சியங்கள்.**

| வ.எண். | பெயர் |
|---|---|
| வா.சா.1 | கலீல் ரகுமான் |
| வா.சா.2 | சதக்கத்துல்லா |

**10. வாதிகள்தரப்பு சான்றாவணங்கள்.**

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.12.1991 | தாவா சொத்தினை 2 ஆம் வாதி, 3 ஆம் பிரதிவாதி ஆகியோர் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 07.08.2006 | 1 ஆம் பிரதிவாதியை 2 ஆம் வாதி, 3 ஆம் பிரதிவாதியின் அதிகார முகவராக நியமித்து எழுதிக்கொடுக்கப்பட்ட அதிகார முகவர் பத்திரம் |
| வா.சா.ஆ.3 | 17.06.2010 | 2 ஆம் வாதி தாவா சொத்தில் அவருக்குள்ள பாதி பாகத்தை 1 ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் |
| வா.சா.ஆ.4 | 23.08.2010 | 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| வா.சா.ஆ.5 | 23.11.2010 | கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்துக்கான வில்லங்க சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | 26.10.2010 | 1 ஆம் வாதி, 2 ஆம் பிரதிவாதி மற்றும் பலருக்கு அனுப்பிய அறிவிப்பின் புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.7 | 01.11.2010 | 2 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் |
| வா.சா.ஆ.8 | 30.11.2010 | வாதிகள், 1, 2 பிரதிவாதிகளுக்கு அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | 21.09.2011 | வாதிகள், 1, 2 பிரதிவாதிகளுக்கு அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.10 | 24.09.2011 | 1 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை |
| வா.சா.ஆ.11 | 26.09.2011 | 2 ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை |
| வா.சா.ஆ.12 | 11.10.2011 | 1 ஆம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.13 | 04.03.2013 | தாவா சொத்திற்கான கணினிப்பட்டா |
| வா.சா.ஆ.14 | 30.03.2022 | தாவா சொத்தின் கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா |

**11. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள்**– இல்லை.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.06.22 17:45:12 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

O.S.198/2022
Sub Court, Oddanchatram.
22.06.2023
Judgment(Fair/Draft)